முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் திருஞானசம்பந்தர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

16.09.2018, ஞாயிற்றுக்கிழமை

1. **அரங்கனே முருகனே தலைவனே**
**அறம் வளர்க்கின்ற தருமனே**
**வரங்களாக மக்களை நோக்கி**
**வழிகாட்டி அருளும் ஞானியே**
2. ஞானியே உன் பெருமை கூறி
ஞாலமதில் ஒளி சூட்சும நூலை
இனிமைபட **விளம்பி யாளி திங்கள்**
**இயம்பிடுவேன் முப்பானோர்திகதி கதிர் வாரம்**
**(விளம்பி வருடம் ஆவணி மாதம் 31ம் நாள் 16.09.2018, ஞாயிற்றுக்கிழமை)**
3. **வாரமதில் திருஞானசம்பந்தர் யானும்**
வழங்கிடுவேன் உலகோர் நலம் பெற
சோரமில்லா ஞானவாழ்வு காண
சுபிட்சம் வளம் யாவும் அடைய
4. அடையவே ஆறுமுகப் பெருமானே
அரங்கன் வடிவில் அழைக்கும்
இடர் வெல்லும் முழுமதி பூசைகள்
ஏழாம் படை வீட்டில் வந்து கலந்து
5. கலந்துமே திங்கள் தோறுமே
கட்டாயம் தொண்டுகள் செய்து
வழங்கிட வேணும் தருமத்தில் உதவி
வழுவாது தீட்சைதனை ஏற்று
6. ஏற்றுமே உயர் சீடர்களாகி
எண்ணிலா கோடி சித்தரிஷிகள் மேல்
பற்று வைத்து தொடர்பூசை செய்து
பணிந்து குருமார்க்கம் விலகா
7. விலகா ஞானவழிகளை தொடர
விடாது சைவநெறி ஏற்க
காலனும் அஞ்ச சக்தி கூடியே
கண்டமிடரில்லா நெடிய ஆயுளும்
8. ஆயுள் ஆரோக்கியம் ஆன்ம பலமும்
ஆனந்தமான வாழ்வு வளமும்
தயை சிந்தை பெருக்கமுடன்
தண்டாயுதனால் எல்லா திடமும் அடைவர்

9. அடைவரே உலக ஆக்கினை வெல்லும்
ஆற்றலும் ஆக்கமும் கூடியே
சோடை போகா ஞானவானாக
சுப்பன் அருள் சீடர்களாக சிறந்து

10. சிறந்து சிறப்பறிவு கூடிட
சிந்தை தெளிவு ஞானசித்தி
பரந்த மனோ பலம் பரோபகாரம்
பக்குவம் பெருகி ஆறுமுகனார்

11. ஆறுமுகனார் ஞானஆட்சியில் பதவி
ஆளுமை சர்வபலமும் பெறுவர்
ஆறுமுக அரங்கன் சீடர்களென்பவர் எல்லாம்
அற்புதமான சித்திகளடைந்து உயர்வர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் திருஞானசம்பந்தர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

ஆறுமுக அரங்கமகா தேசிகனே முருகப்பெருமானே ஞானத்தலைவனே எல்லையில்லா தருமங்களைச் செய்து அறம் வளர்க்கின்ற தருமராசனே துன்பப்படுகின்ற மக்களுக்கு வரங்கள் அளித்ததுபோல் கடைத்தேற்றிக் கொள்ளும் மார்க்கம்தனை உபதேசித்து துணையாய் இருந்து வழிகாட்டி அருள் செய்து காக்கின்ற மகா ஞானியே கலியுக மாற்ற அவதாரமே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் ஆவணி மாதம் 31ம் நாள் 16.09.2018, ஞாயிற்றுக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே திருஞானசம்பந்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் திருஞானசம்பந்தர்.

குற்றமற்ற ஞானவாழ்வினை வாழ்ந்திட சுபிட்சமான வளம்மிக்க வாழ்வினை சர்வ வளங்களோடும் நலங்களோடும் வாழ்ந்திட வேண்டுமாயின் உலக மக்களே நீங்கள் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை நாடிச் செல்லுங்கள்.

ஆங்கே முருகப்பெருமானே அரங்கன் வடிவினில் உலகினில் தோன்றி உலக மக்கள் கடைத்தேறிடவே நடத்துகின்ற, துன்பங்களை வெல்லும் வல்லமை மிக்கதான ஞானியர் சிறப்பு பூஜையான பௌர்ணமி பூஜைகளிலே பயபக்தியுடன் வந்து கலந்து கொள்ளுங்கள்.

மாதந்தோறும் நடத்துகின்ற பௌர்ணமி ஞானியர் வழிபாட்டு பூஜைகளிலே அவரவரும் தவறாமல் கலந்து கொண்டு குடிலில் அரங்கன் நடத்தும் தானதரும அறப்பணிகளிலே தொண்டுகளை பயபக்தியுடன் செய்து அரங்கன் நடத்தும் தானதரும அறப்பணிகளுக்கு தாராளமாய் பொருளுதவிகள் செய்தும் உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரிடத்து தீட்சை உபதேசம் அடைந்து முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கமகா தேசிகனுக்கு உயர் சீடர்களாக ஆகி எண்ணிலா கோடி சித்தரிஷி கணங்களின் மீது பற்று வைத்து பயபக்தியுடன் தவறாமல் பூஜைகள் செய்து, அரங்கனின் உபதேசப்படி நடந்து குருமார்க்கத்திலிருந்து விலகாமல் ஞானவழிகளில் தொடர்ந்து நடந்து வர வேண்டும்.

அவரவரும் உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து சுத்த சைவ உணவினை மேற்கொண்டு சுத்த சைவநெறிப்படி நடந்து வர வேண்டும். அவ்விதமே நடந்திட அவரவர்க்கும் காலனாகிய எமனையும் வெல்லும் அற்புதமான சக்திகள் அரங்கன் அருளால் கூடி கண்டம் இடர்கள் இல்லாத நீடிய ஆயுளும் ஆரோக்கியமான வாழ்வும் ஆன்ம பலமும், மனோபலமும் பெருகி ஆனந்தமயமான

வாழ்வும் வளமும் தயைசிந்தையும் பெருகி தண்டாயுதன் முருகப்பெருமானின் அருளாசிகளால் சகல திடங்களையும் அடைந்து சிறப்படைவார்கள்.

உலகியல் துன்பங்களை வெல்லும் ஆற்றலும் ஆக்கமும் ஊக்கமும் கூடியே வீண் போகாத ஞானவான்களாக ஆகி சுப்பன் முருகப்பெருமானின் சீடர்களாக ஆகி சிறந்து விளங்கி சிறப்பறிவும் பெருகி வாழ்வர்.

சிந்தை தெளிவும் அவரெல்லாம் பெற்று ஞானசித்தி பெற்று பரந்துவிரிந்த மனோபலமும் பரோபகாரமாகிய ஜீவதயவும் பெருகி பக்குவங்கள் பெருகி முருகப்பெருமானார் தலைமையேற்று ஆட்சி செய்யும் ஞான ஆட்சியில் பதவிகளை வகித்து ஆளுமை பலமும் சர்வபலமும் பெற்று சிறப்படைவார்கள்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் சீடர்களெல்லாம் அற்புதமான சித்திகளை அடைந்து சிறப்படைந்து உயர்வான நிலைகளை அடைவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் திருஞானசம்பந்தர்.

–சுபம்–